<u>**ஹீமோபிலியா (ரத்தம் உறையாமை நோய்) பற்றிய கருத்தரங்கு 29/08/2024**</u>

திண்டுக்கல் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில், பொது மருத்துவத் துறை மற்றும் குழந்தைகள் நலத்துறை சார்பில் ஹீமோபிலியா சொசைட்டியுடன் இணைந்து ஹீமோபிலியா பற்றிய கருத்தரங்கம் நடைபெற்றது.




இதில் மருத்துவ கண்காணிப்பாளர் மரு.வீரமணி அவர்கள் தலைமை வகிக்க, மருத்துவ துணை கண்காணிப்பாளர் மரு.சுரேஷ் பாபு மற்றும் நிலைய மருத்துவ அலுவலர் மரு.புவனேஸ்வரி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.



கருத்தரங்கில் மதுரை, மரு.காசி விஸ்வநாதன் அவர்கள் கருத்தரங்கு உரை நிகழ்த்தினார்.






மேலும் பொது மருத்துவ துறை தலைவர் மரு.ராஜ்குமார் மற்றும் குழந்தைகள் நலப் பிரிவு துறை மரு.திருநாவுக்கரசு ஆகியோர் சிறப்புரை ஆற்றினார்கள். இதனை மரு.ரமேஷ் மற்றும் திரு.கவியரசன் ஆகியோர் ஒருங்கிணைத்தனர். இதில் அனைத்து துறை மருத்துவர்கள் மற்றும் பயிற்சி மருத்துவர்கள் உட்பட சுமார் 100 பேர் பங்கேற்றனர்.







